கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 45/2024**

2024-ம் ஆண்டு ஜுலை மாதம் 24 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மங்கையர்கரசி | வயது | 28 |
| கணவர் பெயர் | ராஜேந்திரன் | ஜாதி | |
| தொழில் | வீட்டுக் குடித்தனம் | மதம் | |
| ஊர் | குடவாசல் | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார்.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் குடவாசலில் குடியிருந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது ஊர்க்காரர். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு எனது அப்பாவை ஆஜர் எதிரி கொல்லையில் வேலை செய்த போது அடித்தார். நானும் எனது அம்மாவும் ஏன் அடித்தீர்கள் என்று கேட்டோம். அத்துடன் அன்று சண்டை முடிந்து விட்டது. இரண்டு நாட்கள் கழித்து எனது கணவர் ராஜேந்திரன் கொல்லைக்கு சென்ற போது எனது கணவரை ஆஜர் எதிரி பின்புறமாக பிடித்து கொண்டு ஆஜர் எதிரியின் தாயார் வெந்நீரை எடுத்து எனது கணவரின் இடுப்பு பகுதிக்கு கீழ் ஊற்றி விட்டார். அதில் காயம் ஏற்பட்டது. நான் போய் கேட்டதற்கு என்னை கட்டையால் என்னுடைய வயிற்றில் அடித்தார். நான் அப்போது மாசமாக இருந்தேன். எனது கணவரை குடவாசல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது ரொம்ப காயம்ஏற்பட்டது என்று கூறி திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். பிறகு காவல் நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக புகார் மனு கொடுத்தேன். நான் சொல்ல சொல்ல காவலர்கள் எழுதிக்கொண்டனர். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**நீதிமன்ற புறக்கணிப்பு காரமணாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் இல்லாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.